உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபி௵ மார்கழிமீ கறுஉ | மணி அ.

வணக்கம்.

முருகக்கடவுள்.

வள்ளிக்கு வாய்த்த மணவாளா வுன்மீது
தெள்ளித் தமிழுரைக்குஞ் சேயனுக்கு—வெள்ளி
மலையுறையா னந்தற்கு மாமறைபோ தித்தாய்
மலையா தருள்புரிய வா.

—முத்துராமலிங்க சேதுபதி.

நால்வர்.

நிறைவளருந் தவஞானப் புகலிவருஞ்
சிவஞான நிமலக் கன்றைத்
துறைவளருங் கருங்கடற்கல் லொடுமிதந்த
தமிழ்க்கடலைத் தூய சைவ
முறைவளரும் புக்கொளியூர் முதலைவாய்ப்
பிள்ளைதரு முதலைத் தெய்வ
மறைவளரும் பரிமிசை யெம் மிறைவரச்செய்
இறையையன்பின் வணங்கு வாமால்.

—மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

ஆழ்வார்.

இமிழ்திரைப் பரவை ஞாலத் தியாவருங் கதிசேர்ந் துய்ய
அமிழ்தெனத் தேம்பா கென்ன அருஞ்சுவைக் கனியீ தென்னத்
தமிழ்மறை யுரைத்த வாழ்வார் தயங்குபொற் சரண மென்னும்
உமிழ்நறைக் கமலப் போதெம் முளக்கம லத்தே வைப்பாம்.

—சங்கர நாவலர்.

பொருளாராய்ச்சி.

(ஸ்ரீமாந் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதியது)

உலகத்தில் மக்கள் புரியும் பொருளாராய்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேபோகிறது. அவ்வளர்ச்சியின் வேகம் வருணனைக்கு எட்டாதது. அதை வருணிக்கும் ஆற்றல் எப்புலவனுக்குண்டு? ஆராய்ச்சி வளர வளர அறியாமை தேய்வுற்று அறிவு விளக்கமுறும். ஆதலால் மக்கட்குப் பொருளாராய்ச்சி இன்றியமையாதது.

பொருளாராய்ச்சி செய்யாது வாளா காலங்கழிப்போர் மக்கள் கூட்டத்தின்பாற்பட்டவ ரல்லர். உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் உலகத்தைப் பற்றியும், தன்னெதிரில் புலனாகும் ஞாயிறு திங்கள் ஏனைய விண்மீன்கள் முதலிய வான்பொருள்களைப்பற்றியும் ஆராய்தல் வேண்டும். அவ்வாராய்ச்சியால், ஆராய்வோன் பொருளுண்மை காணக்காண, அவனது அறியாமை நீங்கி அறிவு விளங்குவதோடு, அன்னான் பின்வரும் மக்கள் கூட்டத்தார் வாழ்வும் நலம் பெறும். அத்தகைய ஆராய்ச்சி செய்யாது வாளாகிடத்தல் பெரும்பாவமன்றோ?

ஆராய்ச்சியால் பெறும் உண்மைகளைச் சிலர் தம்மளவில் பயன்படுத்திக்கொள்ளுகிறார்; சிலர் தம்மால் விரும்பப்பெற்ற ஒரு சிலர்க்கு அறிவுறுத்து மளவோடு நின்றுவிடுகிறார்; சிலர் மற்றவர்க்குப் பயன்படுமாறும், அன்னார் ஆராய்ச்சிக்குத் துணை நிற்குமாறும், உலக நலன்கருதியும் நூல்களாக எழுதிவைக்கிறார். தாம் பெற்ற இன்பத்தை ஏனையோரும் நுகர்தல் வேண்டுமென்று எண்ணித் தமது ஆராய்ச்சி அநுபவங்களையும் தாங்கண்ட உண்மைகளையும் நூல்வடிவாக உலகத்துக்கு உதவியுள்ள பெரியோர்கள் வாழ்க.

இதுகாறும் மனிதர் செய்துள்ள ஆராய்ச்சி பலமுகமாக விரிந்து பரந்து நின்றாலும் அதை முக்கூறாகப் பகுக்கலாம். அவை

உலகைப்பற்றிய ஆராய்ச்சி உயிரைப்பற்றிய ஆராய்ச்சி கடவுளைப்
பற்றிய ஆராய்ச்சி என்பன. இம்மூன்றனுள் சிலர் ஒவ்வொன்றைப்
பற்றியும், சிலர் இவ்விரண்டைப் பற்றியும், சிலர் மூன்றைப்பற்றி
யும், ஆய்ந்து நூல்கள் எழுதியுள்ளார். மூன்றும்
இன்றியமையாதன என்பது எனது கொள்கை. உலக
ஆராய்ச்சி ஏனைய இரண்டாராய்ச்சிக்கும் அடிப்படை என்ப
தை நமது நாட்டு ஆராய்ச்சிக்காரர் கவனிப்பாராக. கண்கூடாகத்
தோன்றும் உலகத்தை ஆராயாது, உயிரைப்பற்றியும் கடவுளைப்
பற்றியும் ஆராய்தல் அளவை வழிநில்லா ஆராய்ச்சியாகும். உயி
ருங்கடவுளும் ஆராய்ச்சிக்கெட்டாதன; கண்ணுக்குப்புலனாகாதன.
ஆராய்ச்சிக் கெட்டக்கூடியதாய், கண்ணுக்குப் புலனாவதாயுள்ள
ஒன்றை விடுத்து, பிறவற்றை ஆராய்வதால் உண்மைகாண்டல்
அரிதாம். மனிதன் உயிருண்மை காணவேண்டுமாயின், கடவுளு
ண்மை காணவேண்டுமாயின், உலகை—உடலை நன்கு ஆராய்தல்
வேண்டும். உலக ஆராய்ச்சியும் உடல் ஆராய்ச்சியும் சடப்பொரு
ளாராய்ச்சியென்று அவ்வாராய்ச்சிகளை ஒதுக்குதல் பொருளுண்
மைகாண முயல்வதாகாது.

இந்நாளில் தாவரங்களைப்பற்றியும், பிராணிகளைப்பற்றியும்,
பூதபௌதிகங்களைப்பற்றியும் ஆராய்ந்து எழுதப்பட்ட நூல்கள்
ஏராளமாகக்கிடக்கின்றன. அவைகளைப் பயிலப்பயில இயற்கையின்
பெருமையும் நுண்மையும், கடவுள் படைப்பின் அருமையும் புலனா
கும். இயற்கை ஆராய்ச்சியில் உயிருண்மையும் கடவுளுண்மையும்
விளங்கும். மரங்களைப்பற்றிய ஆராய்ச்சி, பறவைகளைப் பற்றிய
ஆராய்ச்சி, விலங்குகளைப்பற்றிய ஆராய்ச்சி எற்றுக்கு என்று
நமது நாட்டவருள் பெரும்பான்மையோர் இந்நாளில் வினவுவதை
இயல்பாகக்கொண்டுள்ளார். என் செய்வது?

நமது கண்ணுக்கெதிரிலே ஒருகொடி வளைந்தும் மற்றொன்று
சுருண்டும் விளங்குவதையும், ஒரு பறவையின் மூக்கு நீண்டும்,
மற்றொன்றின் மூக்கு வளைந்தும் பொலிவதையும், ஒரு மிருகத்
துக்குக் கொம்பும், மற்றொன்றற்குக் கொம்பின்மையும், இன்னொ
ன்றற்குத் துதிக்கையும் இருப்பதையும் ஆராய்ந்து உண்மை

காணப் பொறுமையில்லாதவரோ, வடிவமேயில்லாததாய், காட்சியளவை கடந்தொளிர்வதாயுள்ள உயிரையும் கடவுளையும் ஆராய்ந்தறிய வல்லார்? நன்று! நன்று!!

கண்ணுக்கெதிரே தோன்றும் இயற்கைமாறுபாடுகளை ஆராய்ந்த அறிஞர்கள் நூல்களெழுதியுள்ளார்கள்; மாறுபாடுகளுக்குங் காரணங்கண்டிருக்கிறார்கள். ஒரு மிருகத்துக்குக் கொம்பிருப்பதென், மற்றொன்றற்கு இல்லாததென் என்பதை ஆராய்ச்சி செய்ய அம்மிருகங்களே கருவிகளாகவிருக்கின்றன. அம்மிருகங்களை ஊன்றி ஊன்றி ஆராய்ந்தால் கொம்புண்மைக்கும் இன்மைக்கும் விடை அம்மிருகங்களே பகரும். பிறவும் இவ்வாறே. அதுபோல உலகத்தை—உடலை ஆராய ஆராயச் சிந்திக்கச் சிந்திக்க அவ்வுலகமே அவ்வுடலே தன் தன் வரலாற்றை—தத்துவத்தை அறிவுறுத்தும். இவ்வுலகமாகிய நூலைப் படிக்கின்றவனல்லனோ புலவன்? எடுகளை நம்பிக்கையால் படிக்கின்றவனா புலவன்? சொற்களைக் கற்கள்போல அடுக்குகின்றவனா கவிராயன்? சுருங்கக்கூறின் பருப்பொருள் ஆராய்ச்சியில் நுண்பொருளுண்மை புலப்படும் என்று கூறலாம்.

ஆராய்ச்சிக்குக் கருவியாகவுள்ள உலகை—உடலை, எடுத்ததும் பொய்யென்றுகூறி அவைகளை வெறுத்துத்தள்ள என்மனம் ஒருப்படவில்லை. என்னறிவை விளக்கிவரும் உடலை—நான் வாழும் இவ்வுலகை—எனக்கெல்லாவழியிலும் இன்பமூட்டிவரும் இயற்கைத்தாயை நான் பொய்யென்று வெறுப்பேனோ! அவைகளை வெறுக்குமாறு என்சகோதரர்களுக்குஞ் சொல்வேனோ? அவைகளைப் பொய்யென்றுகூறுவதற்குமுன் அவைகளை ஆராயுமாறு அவர்களை வணங்கிக்கேட்பேன். ஆராய்ச்சியில் பொய்யாயினுமாக; மெய்யாயினுமாக.

பொருளாராய்ச்சி செய்து உலகைப்பொருளெனக் கொண்டோரும், உயிரைப் பொருளெனக்கொண்டோரும், கடவுளைப்பொருளெனக்கொண்டோரும், இரண்டையோ மூன்றையோ எதையோ பொருளாகக்கொண்டோரும் முறையில் அண்ணன் தம்பி போன்றவரேயாவர். பொருளாராய்ச்சி முறைகளை மதங்களாகக்கொண்டு

இடர்ப்படுவது அறியாமையாகும். பொருளாராய்ச்சியில் தலைப்பட்டுத் தங்கண்ட உண்மைகளை உலகத்துக்கு வழங்கிய எல்லா அறிஞரிடத்திலும் எனக்கு ஒரேவித அன்பு நிகழ்கிறது.

பூதபௌதிகங்களை ஆராய்ந்து பொருளுண்மைதானை முடியாது, அவைகளிலுள்ள சில சக்திகளைக்கண்டு அவ்வளவில் நின்று, அச்சக்திகளைக்கொண்டு, பலதிற கொலைக்கருவிகள்கண்டு உயிர்களை வருத்துவது இயற்கைக்கு அரண்செய்யும் அறமாகாது. சில கூட்டத்தார் இயற்கையிலுள்ள சில சக்திகளைக்கொண்டு கொலைக்கருவிகளும் விஷக்காற்றுக்களும் கண்டு வருவது மனித வகுப்பை நாசப்படுத்துவதாகும். சூரிய கிரணத்தின் வாயிலாக உயிர்களைவதைக்கும் முறைகள் காணப்படுகின்றன என்று பத்திரிகைகளில் வாசிக்கும்போது குடர்நடுங்குகிறது. அக்கூட்டத்தார் தம்மறிவையும் இயற்கைச்சக்தியையும் அன்புக்கு மாறுபட்ட நெறியில் பயன் படுத்திவருவது வெறுக்கத்தக்கது; மறுக்கத்தக்கது.

நமது நாட்டுப் பெரியோர்கள் இயற்கையை ஆராய்ந்தபோது அவர்கட்கும் இயற்கைமாட்டுள்ள சக்திகள் புலப்பட்டிருக்கும். அவர்கள் அவைகளைத் தம்மாராய்ச்சிக்குத் துணையாகக்கொண்டு பொருளுண்மை குறித்து உழைத்துக் கடவுளுண்மைகண்டார்கள். அவர்கள் வெறும்புறப்பொருள் ஆராய்ச்சி செய்ததோடு நில்லாது அகமுயற்சியிலுந் தலைப்பட்டு உழைத்து அநுபவஞானம் பெற்றமையால், எங்குங்கடவுளுண்மைகண்டு எவ்வுயிர்க்குந் தீங்குசெய்யாத அறநெறியை நமக்கு அறிவுறுத்தினர்.

எவ்வுயிரு நீங்காதுறையும் இறை சிவனென்று
எவ்வுயிர்க்கு மன்பா யிரு. —சைவசமயநெறி

(தொடரும்)

பருத்திப் பெண்டிர்.

(கோவைமுத்தூர் தமிழ்ப்பண்டிதர் அ. கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் எழுதியது)

நமது முன்னோர் பத்தினிப்பெண்டிர், வீரப்பெண்டிர் முதலியவர்களைப்பற்றிப் பலவாறு பகர்ந்திருக்கின்றனர். அங்ஙனமே பருத்திப்பெண்டிரைப் பற்றியும் சில குறிப்புகள் சங்க நூல்களில் கிடைக்கின்றன. பருத்திப்பெண்டிர்—நூல் நூற்கும் பெண்மக்கள். இதுகாலை, நம் நாட்டில் தோன்றியுள்ள தெய்வீக இயக்கத்திற்கு அடிகோலிகளாய் உள்ள பருத்திப் பெண்டிரைப் பற்றிப் பகரவேண்டுவதின்று. பழங்காலத்தில் அவர்களைப்பற்றியன யாவை என்பதே ஆராயவேண்டுவதாகும். ஆகையால் இச்சிறு கட்டுரை, "பருத்தி" "பெண்டிர்" என்னும் இரு பகுதிகளாகப் பகுத்து வரையப்படுகின்றது. "பருத்தி" என்னும் சொல் சங்க நூல்களில் செம்மையாகப் பயிலப்படுகின்றமையால், இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பருத்தியைப்பற்றிய செய்திகள் யாவற்றையும், நம்முன்னோர் நன்கு தெரிந்திருந்தனர். அதனை விதைத்துப் பயிராக்கிப் பயன் கொள்ளும் முறையையும், பின்னர் சேமித்துவைக்கும் திறமையும், செம்மையாகத்தெரிந்து கடைப்பிடித்து வந்தனர். புறநானூற்றில் பல இடங்களில்,

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்"

"பருத்திவேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்"

எனச்சொல்லப்படுகின்றது. "பருத்திவேலி" என்பதற்குப் பருத்திச் செடிகளால் ஆகியவேலி எனப்பொருள் கொள்ளல் சிறப்புடையது அன்று. பருத்திச்செடிகள் வேலிக்குப் பயன்படும் அத்துணை உரம் உடையன அன்று. வேலியாகவளர்க்கப்படும்சிறிதளவு பருத்திச்செடிகளில் பெரும்பயன்கொள்ள ஒண்ணாது. ஆகையால் "வேலி" என்பதற்கு ஓர் அளவு கொண்ட நிலத்தின் பகுதி என்றே பொருள் கொள்ளல்வேண்டும். தஞ்சாவூர்ப்பக்கம் ஐந்து காணி நிலத்தை வேலி என்பர். மேலும் "புன்புலம் தழீஇய" என்றதனால் பருத்தி நன்செய் (மருதம்) நில விளைபொருளாக அன்றி, புன்செய்

(முல்லை) நில விளைபொருளாகவே பயிர் செய்யப்பட்டது. ஆயினும், உண்டியைப் போன்றே உடைக்குதவும்பருத்தியினை, முல்லை நிலக் கருப்பொருளாக இலககணம் வகுக்காத காரணம் என்னையோ? பிறிதோர் இடத்தில்,

> "கோடைப் பருத்தி வீடு நிறை பெய்த
> மூடைப் பண்டம் இடைநிறைத் தன்ன"

எனக்கூறப்படுகின்றமையால், பருத்தி, கோடைப்பருத்தி கார்ப்பருத்தி என இருவகைப்படும் என்பதாயிற்று. கோடைக்காலத்தில் விளைவது கோடைப்பருத்தி; கார்காலத்தில் விளைவது கார்ப்பருத்தி. முன்னது முதன்முறை விளைவது; பின்னது இரண்டாம்முறை விளைவது. முன்முறை விளைவது, வெண்மையாகவும் தூய்மையாகவும் பருமனும் நீண்ட இழைகளுமுள்ளதாயும் இருக்கும். பின்முறை விளைவது அதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். கார்ப்பருத்தியினும் கோடைப்பருத்தியிலேயே இழைகள் செம்மையாகவும், நுண்மையாகவும், நீளமாகவும் காணப்படும். ஆகையால், பெருஞ்செலவில் மேல்திசைப் பருத்திப் பரிசோதகர், இதுகாலை கண்டுபிடித்த இழையின் இலக்கணத்தை, நம்முன்னோர் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, எளிதில் பயின்றிருந்தமை புலப்படுகின்றதன்றோ? இதனால், நுண்ணிய இழைகள் நூற்கப்படும் கோடைப்பருத்தியினை மூட்டை மூட்டைகளாக வீடுகளில் நிறைத்து வைத்தனர். நம் நாட்டிற்கேயன்றி, பிறநாடுகளுக்கும் சிறந்த பருத்தி நூல்களும், ஆடைகளும் அனுப்பப்பட்டு வந்தமையால் அவற்றை நிறையப்பெய்து, சேமித்துவைத்தல் அவசியமாயிற்று.

இத்துணை மூடைகளாய் விளைந்த பருத்திப்பொதிகள் அனைத்தும் எங்ஙனம் நூலாயிற்று? இயந்திரசாலைகள் இருந்தனவா? கூட்டுறவுத் தொழிற் சாலைகள் இருந்தனவா? எனின் அவை ஒன்றுமே இருந்தனவாகச்சங்க இலக்கியங்களில் ஓரிடத்தும் காணேம். ஆயிரம் ஆயிரம் ஆகக் கூட்டங் கூடி ஆண்பாலாரும் பெண்பாலாரும் ஓரிடத்து ஒருங்கே தொழில் புரியும் பான்மை அக்காலத்தில் இல்லை; இல்லை. கூட்டங் கூட்டமாக இருபாலையும் ஒருபாலாக்கித்தொழில் துறையில் அமைக்காக்காரணம் ஆராய்தல்வேண்டும்.

அப்பருத்திப் பொதிகள் அனைத்தும் பகலினும் இரவினும் தனித் தனியாக—இயைந்தால் தாங்களே சேர்ந்த ஒரு சிறுகூட்டமாக—பெண்பாலாரே நூற்றுவந்தனர். நூல் நூற்பதற்கு முன்னர் பஞ்சை எஃகி (உடைத்து)த் திரிகளாகத் திரித்துப் பின்னர் நூற்பது வழக்கம். நூற்பதினும் எஃகுவது அருமை என்பது நூற்கின்றவர் அனைவரும் அறிவர். நூற்பவர் அனைவரும் எஃகுவர் என எண்ண ஒண்ணாது. இக்காலையும் நூற்பவர் தொகை பெருகி எஃகுவோர் தொகை அருகியிருப்பது, அவ்வியக்கத்தில் ஈடுபட்டோர்க்குத் தெரிந்ததே. நூற்பவரினும் எஃகுவோர்கைகள் உரமும் திண்மையும் பெற்றிருத்தல் வேண்டும். முன்னாளில் நூற்கும் பெண்டிரே எஃகும் தொழிலும் பயின்றிருந்தனர். எத்துணை வரையும் பஞ்சைத் தூய்மையாகவும், பரந்து படவும் எஃகப்படுகின்றதோ, அத்துணையும் நுண்ணிய இழைகள் நூற்பதற்குத் துணைபுரிவதாகும். இவையனைத்தையும் உற்றுநோக்கிய புலவர் ஒருவர் "பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன" எனக்கூறினர். "பருத்திநூற்கும்பெண்டாட்டிபதுசுகிர்ந்தபஞ்சுபோன்ற" என்பது இதன்பொருள். பனுவல்—சுகிர்ந்தபஞ்சு; எஃகினபஞ்சு. சுகிர்ந்த பஞ்சாலாகிய திரிகளால், பருத்திப் பெண்டிர் பகற்பொழுதே அன்றி இராப்பொழுதும் இடைவிடாது நூற்பாராயினர். பகற்பொழுதில் நூற்கும் நூலினும், இராப்பொழுதில் நூற்கும் நூலே நுண்ணிய இழையாக நூற்கப்படும் என்பதைச் செவ்வனே தெரிந்திருந்தனர். இதுபோழ்தும் வெப்பம் மிக்க நாடுகளினும், தட்பம் மிக்கநாடுகளில், மிக நுண்ணிய இழைகள் நூற்கப்படுகின்றமை, அத்துறை பயின்றார் அனைவரும் அறிந்ததேயாம். இதனானே வெப்பம் மிக்க நம் நாட்டினும், தட்பம் மிக்க மேல்நாடுகளில், சாலவும் நுண்ணிய நூல்கள் நூற்கப்படுகின்றன. இவ்வுண்மையினைப் பழங்காலத்தில் பருத்திப் பெண்டிர் அனைவரும், வழிவழியாகவே அறிந்து பயின்றுவந்தனர்! இதுகாலையும், நுண்ணிய இழைகள் நூற்பவர் விடியற்காலத்தில் நூற்பதைக் கண் கூடாகக் காணலாம். பகற்பொழுதினும் இராப்பொழுதில் தட்பம் அதிகம் ஆயினமையான், நுண்ணிய நூல்கள் நூற்கப்படுமென்பது அனுபவம் ஆகும். இதனைக் கூர்ந்து அறிந்த

அறிஞரொருவர், "பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கு" என்றனர். இதனால் நுண்ணிய இழைகள் நூற்பதற்காகப்பழங்காலத்தில், பருத்திப் பெண்டிர் விளக்கு வைத்து நூற்றுவந்தனர் என்பது பெறப்பட்டது. மேலும், இதுகாலையும் நமது நாட்டிலேயே இயந்திரசாலைகளில் கோடைக்காலத்திலும், மாரிக்காலத்தில் நுண்ணிய இழைகள் வருவதும், கோடைக்காலத்தில், இயந்திரசாலையின் மேல்கூறையில் தண்ணீர் ஊற்றுவதும், கண்கூடாகக் காண்கின்றோமன்றோ? நாயகனையிழந்த நங்கையர் நூற்ற நூலைப்பற்றி; நற்றிணையில் நன்றாக நவிலப்படுகின்றது. "ஆளில் பெண்டிர் தாளில் செய்த நுணங்கு நுண்பனுவல்" என்னும் அருந்தொடரேயாம். "நாயகனை இழந்த நங்கையர் தம் உயிர் வாழ்க்கைக்கு வேண்டும் பொருளின் பொருட்டு முயன்று நூற்கின்ற மிக நுண்ணிய நூல்." என்பது இதன் பொருள். கணவன் மாட்டுப் பற்றுக்கழிந்தபின், கடவுள்மாட்டுப் பற்று வைக்கவேண்டுவதே, கைம்மைப்பெண்டிரின் கலங்காத நோன்பு. கைராட்டினம் சுற்றுவது அந்நோன்பிற்குத் துணைபுரிவதாகும். கைராட்டினத்தின் ஒலியானது, யோகம் பயில்வோர் உச்சரித்துப் பழக்கம் செய்யும் "சோகம்" என்னும் ஒலிக்குறிப்பாகும். இதனைப் பருப்பொருளாகவன்றி, நுண்பொருளாக நோக்குவோர் அனைவர்க்கும் புலப்படும். இவ்வின்ப ஒலி சாமவேத கானம் போன்றும், கண்ணன் குழலோசை போன்றும், காதிற்கு மகிழ்வு ஊட்டிக் கடவுளின் கழலிணையில் கருத்தினைக்கட்டுவதாகும். இதனானே அந்நாளில் கணவனையிழந்த மகளிர் தாமேதனித்து வாழ்வதற்காகவும் தாமே முயன்று தமக்கு வேண்டுவன ஈட்டுவதற்குப் பொருள் வருவாய்க்காகவும், கைராட்டினத்தொழிலை மேற்கொண்டனர். கணவனையிழந்ததும், சில சடங்குகள் செய்தபின், கைராட்டினமும், வில்லும், சிறிது பஞ்சும் கொடுத்துத்தனியாக வதிய வைத்தல் வழக்கமாக இருந்தது. இம்முறைமை இன்னும் கொங்கு வேளாளர் மரபில், செய்கை அளவாக நிகழ்ந்து வருகின்றது. கைம்மையர் அகத்திலிருந்து புறம்போகாது, பல்நாளும் இடையீடின்றிச் செய்யும் தொழில் இஃது ஒன்றேயாம். அவர்கள் பிறர் உதவியின்றித் தம் முயற்சியிலேயே பொருள் ஈட்டி உண்டல்

வேண்டுமென்பது அத்தொடரின் கருத்து. இங்ஙனம் மூபன்றுநூற்கும் நூல் மிக நுண்ணியதாகும் என்பதை நுவலல் வேண்டுமோ? இதனானே, "நுணங்கு நுண்பனுவல்" எனக் கூறினர் போலும். இந்நன்னூலின் நலத்தை நன்னூலார்,

"பஞ்சி தன்சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையாய்—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூல் முடியும் ஆறு"

என நன்கு நவில்வாராயினர். இதனுள் செஞ்சொல் புலவனையும் சேயிழையை—பெண்ணையும் உருவகப்படுத்திக் கூறியிருப்பதை உற்று நோக்கி உவத்தல் வேண்டும். நூல் நூற்றலைப்பற்றி இறையனார் அகப்பொருள் உரையில், "நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளால் கைவல்மகடூஉத் தனது செயற்கை நலம் தோன்ற ஓர் இழைப்படுத்தலாம், உலகத்து நூல் நூற்றல் என்பது." என இயம்பியுள்ளமையால் அந்நாளில் நூல் நூற்றலைப் பற்றிப் பல புலவர்கள் எத்துணைச் சிறப்பாக மதித்திருந்தனர் என்பதைப் புகலல்வேண்டுமோ? பழங்காலத்துப் பருத்திப் பெண்டிர் புலவர் பாடும் புகழ் உடையராய், வீற்றிருந்தார் எனின், அவர் தம் மாண்பு என்னே! என்னே!! பாடுபெற்றப் பருத்திப் பெண்டிர் பல்கியிருந்த நம் நாட்டின் உயர்ச்சியே உயர்ச்சி! சிறமையுற்று அன்னார் அல்கியிருக்கும் நம்மவரின் தாழ்ச்சியே தாழ்ச்சி!! அதுகாலை, அவர்களின் உயர்வை உன்னுந்தோறும் உண்டாகும் உவகையே உவகை! இது காலை அன்னோர் இழிவை எண்ணுந்தோறும் எழும் இன்னலே இன்னல்!! காலக்கதியால் பருத்திப் பெண்டிர் தொழில்களின் மேல் மறதி எனும் மணல் மேடு இட்டிருப்பினும், அதனைக் காலக்கடவுள் உரிமை உணர்ச்சியால் தூர்த்துப் பண்டைய நிலைமைக்கு உயர்த்துவது திருவருளேயாகும்.

கதிர்காமக் காட்சி.

கண்டாமாணிக்கம் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான். வ. மு. இரத்திநேசவரய்யர் அவர்கள் எழுதிய கட்டுரையின் சுருக்கம்:—

"கதிர்காமம்," என்பது சுப்பிரமணிய ஸ்தலங்களுள் ஒன்று. இது இலங்கையின் தென்பாகத்தில் உள்ளது. "ஜோதிஷ்காமம்; அம்சுகாமம்" என்பன இதன் வடமொழிப் பெயர்கள். கதிர்—பிரகாசம். அம்சு—ஜோதி. திருக்கோணமலை, திருக்கேதீச்சரம், நகுலகிரி, வாரிவனம், முனீச்சரம் முதலிய சிவஸ்தலங்களும், காங்கேசன்றுறையை யடுத்த மாவிட்டபுரம், கந்தவனம், கண்டகி வடகாந்தாரம், உகந்தமலை முதலிய சுப்பிரமணிய ஸ்தலங்களும், வல்லிபுரம், பொன்னாலயம், வேங்கடேசப் பெருமாள்கோயில் முதலிய விஷ்ணு ஸ்தலங்களும் இலங்கையிலே உள்ளன. இவைகளுக்குள்ளே அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழுடையது கதிர்காமம் எனுந் திருத்தலமே யாகும். கதிர்காமத்தில், "கதிரைமலை' என்றதோர் மலையுண்டு. இம்மலையின்மீது, "சிந்தாமணி" எனும் பெயருடைய கோயில் ஒன்று இருந்தது. தற்காலம் அதுகண்டு வழிபடுவதற்கில்லை. ஆனால், திருவருளை மறவாத ஓரே நினைவுடைய அடியார்கள், அம்மலை சென்று வழிபாடு செய்து வருகின்றனர். இம்மலையைச் சூழ்ந்து விநாயகமலை, பிள்ளையார்மலை, பைரவமலை, தேவஸேனைமலை, வள்ளிமலை முதலியன இருக்கின்றன. தற்காலம் யாவரும் போய் வணங்குமிடத்தில் ஓர் ஆலயம் இருக்கின்றது. இதுதான், "ஏமகூடம்" எனும் பெயரால் அழைக்கப்பெற்ற பாசறையாம். இந்த ஆலயத்தினுள்ளே நாரதமகாமுனிவர் பூசைசெய்த யந்திர விசேஷமுள்ள இரகசியம் உண்டு. மற்றும் இத்திருத்தலத்தில் மாணிக்கப்பிள்ளையார்கோயில், பெருமாள்கோயில், புத்தமதஸ்தர் வழிபாடு செய்யும் பெரிய அரசவிருக்ஷம், பத்தினித்தாயார் கோயில், தேவயானையம்பாகோயில், மற்றுஞ்சில சத்திகோயில்கள் பாசறைக் கோயிலைச் சுற்றி இருக்கின்றன. ஸ்ரீ கந்தக்கடவுள் திருவுலாவரும் திருவீதி முக்கோணவடிவமாக விருக்கின்றது. முக்கோணத்தின் முனையிலே வள்ளிநாயகித் தாயாருக்கு ஒரு கோயில் இருக்கிறது. அதன்பக்

கத்திலே முத்திலிங்கேசுவரர் கோயில் காணப்படும். வள்ளியம்பா கோயிலின் வலப்புறத்தே, "கதிரைநபி" என்னும் பேருடன் மகம்மதியர் வழிபடும் ஓர் சமாதி இருக்கின்றது. மலையில் சுவாமி கோயில் அக்கினி திக்கை நோக்கி இருக்கிறது. கிழக்கு நோக்கி இரண்டு மைல் தூரத்தில் விபூதிமலை என்று ஒரு இடம் உண்டு. வடமேற் பக்கத்தில் நாலு மைல் தூரத்தில் செல்வக் கதிர்காமம் இருக்கிறது. இங்கே வள்ளியம்மையார் பால்காய்ச்சிய இடம், முருகவேள் வேங்கையுருவான இடம், விநாயகர் யானையாகத் தோன்றிய இடம், சந்தனம் உண்டாகும் இடம், முதலியவைகள் காணப்படுகின்றன. கதிர்காமத்தில் நகரத்தார் மடமும் வேறுபல விடுதிகளும்உள்ளன. கோயிலினுள்ளேபலதிரைகள்உண்டு. இரண்டாவது மண்டபத்திலும் அநேக மூர்த்திகள் உருவத் திருமேனியுடன் இருப்பதாகத் தெரிகின்றது. புராதனகாலத்தில் தேங்காய் தானே உடைப்பது முதலியன நிகழ்ந்திருக்கலாம். இப்போது அப்படியில்லை. சனிக்கிழமைகளில் திருமுழுக்கு என்று ஒருஆராதனை நடைபெறுகின்றது. இங்கே பூசைசெய்வோர் சிங்களவரே. இவர்கள் வேட்டுவ வமிசத்தவர்கள். இவர்களைக், "கப்பகனர்" என்று சொல்வர். இவர்கள் சத்தியம் நேர்மை பொறுமை ஆசாரம் பக்தி முதலியன உடையவர்கள். (சிலகாலங்களில் இங்கு சம்பந்தமற்ற போலி வேடதாரிகள்வந்து பொருள்பறித்துச் செல்வதுண்டு. இவர்கள் கதிர்காமவாசிகளுமன்று. இவர்கள் சேகரிக்கும்பொருள் கதிரைமலைவாசனுக்குச் சேர்வதுமில்லை.)

சூதமகா முனிவர் தெக்ஷிணகைலாச புராணத்து ஒன்பதாம் அத்தியாயம் முதல், மூன்று அத்தியாயங்களில்கதிர்காமப்பெருமை கூறியுள்ளார். இந்த ஆலயத்துட்பட்ட இருபத்தாறு ஏக்கர் தூரம் பெருங்காடாக இருக்கிறது. யானை புலி கரடி முதலிய காட்டு மிருகங்கள் பல உள்ளன. முந்நூற்றறுபது குடிகள் கதிர்வேற்பெருமான் பெயர் சொல்லிப் பிழைக்கின்றார்கள். இக்கோயிலைப் பண்டாரநாயக்கர் என்னும் சிங்களப்பிரபு பரிபாலனஞ் செய்து வருகின்றார். இலங்கைச் சைவபரிபாலன சபையாரும்

வேண்டிய சகாயஞ்செய்து வருகிறார்கள். இக்கோயிலில் நடைபெறும் விசேஷகாலங்கள் மூன்று. அவற்றுள் சித்திரை மாசப்பிறப்பு ஒருநாளும், ஆடி மாசத்தில் அமாவாசை முதல் பௌர்ணிமை வரையில் பதினைந்து நாட்களும், கார்த்திகை மாசத்தில் பரணி முதல் மூன்று நாட்களும் குமரநாயகன், வீதியில் பவனிவரும் விழாக் காலங்களாகும். ஆடியில் அநேக ஆயிரவர்வந்து சேவிப்பார்கள். நீர்வெட்டு என்று தீர்த்தவாரியைச் சொல்வார்கள். வள்ளியம்பா சந்நிதியில் பட்டுத் தீர்த்தம் கிடைக்கும். மாணிக்க கங்கையில் ஜோஸியர் கூறும் இலக்கினத்தில் தீர்த்தம் கொடுப்பது அங்குள்ளமுறை. மற்றைய கோவில்களிற்போலச் சுவாமி உருவமாக வெளிவருவதின்று. கற்பகனுர் வாயைக்கட்டி உள்ளிருந்து ஏதோ ஒன்றைக்கொண்டுவந்து யானைமீதுள்ள பீடத்தினுள்ளே வைப்பார். பீடம் ஒரு பெட்டிமாதிரியே இருக்கும். அதுதான் திருவுலாக்குறியாகும். சண்முகநாதன் சர்வாந்தரியாமியாயினும் யந்திரத்திலே அடங்கி நின்றருளுவார் என்பது தெரிகிறது. அதாவது முத்திலிங்கர் என்ற மகாநுபாவரால் சித்தஞ் செய்யப்பட்ட யந்திரமே ஒரு பேழையோடு திருவிழாக்காலத்தில் வெளிவருவதாகப் பெரியோர் சொல்லுகின்றனர்கள். முத்திலிங்கராவார் காசியினின்று ஏறக்குறைய முன்னூறு வருஷங்களுக்கு முன்பே கதிர்காம நாத சுவாமியாரின் அநுக்கிரகத்தால் வந்து கதிர்காமஞ்சேர்ந்த பைரவப் பிராம்மணபக்தர். இம்மகானுலே கந்தக்கடவுள் உத்தரவுப்படி செயப்பெற்ற யந்திரமே வெளிவந்து வள்ளியம்பர் கோயிலில் இறக்கி ஆராதனை செய்யப்பட்டுத் திரும்புவது. முத்திலிங்கர் அடங்கிய இடமே முத்திலிங்கர் கோயில் என்று சொல்லப்படும். இவர் மரபான பைராகிகளே இன்றும் அங்கே உளர். வயிராவிகள் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்கள். பால்குடிபாவா என்னும் பெரியவர்தான் கோயில்களை நன்கு நடாத்தி வந்தவர். இவர் பால்குடித்துச் சண்முகநாதனை வழிபட்டு, மலையிலே அப்பெருமானை உண்மையாகக் கண்டு ஞானப்பேரமுதருந்தியவர். இந்தப் பால்குடிபாவாவுக்கும் ஒரு சமாதி தேவயானை அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ளது. மாணிக்கப்பிள்ளையாருக

ரும், தேவயானையம்மனுக்கும், முத்திலிங்கேசருக்கும் இன்றும் பைராகிகளே பூஜைசெய்து வருகின்றார்கள். அங்கபத்தினியம்பா கோயில் சிலமாய் விட்டதால், இப்பொழுது மண்சுவர் கொண்டு ஒரு கோயில் கட்டியிருக்கிறார்கள். மலைக்குப்போகும் வழியில் ஆண்டான் மலையென்று ஒரு இடம் இருக்கிறது. இத்தலத்தை சாந்தி முத்திபெற்றவர், அபவிர்த்தி, வேட்டுவக்கள்வர், பாவநீபன் முதலியோராவர். இத்தலப்பெருமையை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தமையனாராகிய பரமானந்தப்புலவர் இயற்றிய, "கதிரைமலைப் பேரின்பக்காதல்" எனும் நூலில் இனிது காணலாம்.

இந்தியாவுக்குப் பொதுப்பாஷையும், லிபியும்.

(சென்ற டிசம்பரில் ஸ்ரீமாந் ஆர். சி. டட் அவர்களின் தலைமையில் நடந்தேறிய காசி நாகரி பிரசாரண சபையில் ஸ்ரீலோகமான்ய பாலகங்காதர திலகர் பெருமான் செய்த உபந்யாச சாரம்.)

பெரியோர்களே!

நாகரி பிரசாரண ஸபையின் நோக்கமின்னதென்பது எற்கனவே தலைவரவர்களால் உங்கட்கு விவரிக்கப்பட்டது. எனக்குப் பின்னும் சுமார் பத்துப்பெயர்கள் வரை பேசவேண்டியிருப்பதாலும், எல்லாம் ஒன்றரை மணிக்குள் ஆகவேண்டியிருத்தலாலும், சில விஷயங்களில் எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திட முயல்கிறேன். இந்தக் கூட்டத்தின் முக்ய நோக்கமானது வட இந்தியாவுக்குப் பொதுவான ஒரு லிபியை(எழுத்தை) எற்படுத்த வேண்டுமென்பது மாத்திரமல்லவென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்; ஆனால் அதனைக் காட்டிலும் வேறொரு பெரிய காரியத்தை நிறைவேற்றுவதிலும் கருத்துக்கொண்டிருக்கின்றது. ஒரு தேசியக் கூட்டமானது இந்தியாவுக்குப் பொதுவானதொரு பாஷையையே பெற்றிருக்கவேண்டுமென்பதை நான்

உங்கட்கு வற்புறுத்த விரும்புகிறேன். ஏனெனில், ஒரு பொதுப் பாஷையே ஒரு தேசத்தின் ஒற்றுமைக்கு அவசியமானதொரு அங்கமாகும். ஒருபொதுப் பாஷையினாலேயே நீங்கள் உங்களுடைய அபிப்பிராயங்களை மற்றவர் நெஞ்சில் பதியும்படி சொல்ல முடியும். "வாக் அல்லது பாஷையிலிருந்துதான் ஒவ்வொன்றும் முன்னுக்கு வந்திருக்கின்றது" என்று மநு நன்றாய் வெளியிட்டிருக்கிறார். ஆகையால், நீங்கள், உங்கள் தேசத்தினரையே ஒற்றுமைப் படுத்தவேண்டுமென்று முயன்றீர்களானால், அது ஒரு பொதுப்பாஷையினாலாகுமேயன்றி, வேறொரு அம்சத்திற்கு அத்தகைய சக்தியுண்டாகாது. இதுதான் இந்த ஸபையின் லக்ஷ்யமுமாகும். ஆனால் இந்த லக்ஷ்யம் எப்படிக்கைகூடும் என்பதே இப்போது ஆலோசிக்கவேண்டிய விஷயம். வட இந்தியாவுக்கு மட்டும் ஒருபொதுப்பாஷையைத் தேடுவதே நமது நோக்கமாகப் படாது; நாளடைவில் சென்னை மாகாணம் அல்லது தென்னிந்தியாவையும் உள்ளிட்ட இந்தியா முழுதுக்குமே ஒரு பொதுப் பாஷையாக உபயோகப்படக்கூடிய ஒரு பாஷையைக் காணுவதில் தான் நம்முயற்சி பதியவேண்டும். இப்படி நமது நோக்கம் விரியுமானால், அதற்காக எடுத்துக்கொள்ளும் சிரமமும் பெருகத்தான் வேண்டும். முதன் முதலில் நமக்குத் தோன்றும் சிரமமானது சரித்திரபாகத்தைப் பற்றியதாகவே இருக்கும். ஆதியில் ஏற்பட்ட ஆரியர் ஆரியரல்லாதார் வாதமும், பின்னர் ஏற்பட்ட இந்து முஸல்மான் வாதமும் நம் தேசத்துப் பாஷையின் ஒற்றுமையைக் கெடுத்திருக்கின்றன. வட இந்தியாவில் பேசப்படும் பாஷைகளெல்லாம் ஆரியப்பிறப்பையும் தென்னிந்தியாவில் பேசப்படும் பாஷைகளெல்லாம் திராவிடப் பிறப்பையும் உடையனவாயிருக்கின்றன. இந்த ஆரிய திராவிட பாஷைகளில் சொற்கள் மாத்திரம் வேறுபட்டிருக்கவில்லை; அந்தச் சொற்கள் எழுதப்பெற்றுள்ள எழுத்துக்களும் பேதப்பட்டிருக்கின்றன. பின்னர், இந்த மாகாணத்தில் பிரதானம் பெற்றுள்ள ஹிந்தி உருது என்னும் பாஷைகளின் வேற்றுமையும் ஆராயப்படவேண்டியிருக்கின்றது. எங்களுடைய பக்கங்களில், மராத்திப் புஸ்தகங்கள் எழுதப்பெற்றி

ருக்கும் லிபியானது தேவநாகரி லிபியிலிருந்து வித்யாஸம் காணும் படியாகவே இருக்கின்றது.

ஆகையால், நாம் முஸல்மானிய அல்லது பாரஸீக லிபிகளைப் பற்றிப்பேச எடுத்துக்கொள்வதற்குமுன், நமது பாஷையையும் லிபியையுமே ஒற்றுமைப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கே பொதுவான பாஷையை நாம் குறிப்பிடுவதே நமது முக்ய லக்ஷ்யமாக இருந்தபோதிலும், நாம் நம் ஏணியின் முதற்படியிலிருந்தே ஏறவேண்டியிருக்கிறது என்பதை நான் முன்னமே தெரிவித்துக்கொண்டேன். அதாவது இந்துக்களுக்கே பொதுவாகியதொரு லிபியைக்கொண்டுவர முயல்வதே முடிவான காரியமாகும். ஆனால், இங்குங்கூட ஆரியம் அல்லது தேவநாகரி லிபியும் திராவிடம் அல்லது தமிழ் லிபியும் ஆகிய இரண்டு லிபிகளையும் ஒற்றுமைப்படுத்த முயலவேண்டியது அவசியமான காரியமாயிருக்கிறது. இவ்விரண்டு பாஷைகளும் எழுத்துருவத்தில் மாத்திரமா வேறுபட்டிருக்கின்றன; திராவிட ஸப்தங்களும் தொனிகளும் ஆரிய பாஷை ஒன்றிலுமே காணாதிருப்பதையும் அறிகிறோம்.

படிப்படியாய் முன்போவதே நமது தீர்மானமாக வேண்டும்; உங்கட்குத் தலைவரவர்கள் குறிப்பிட்டபடி முதன்முதலில் ஆரிய பாஷைகளின் தொகுதியை எடுத்துப்பேசப் புகுவோம்; ஆரிய பாஷைகளெல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலிருந்தே தோன்றினவைகளாக இருக்கின்றன; இவைகள் ஹிந்தி பங்காளி மாராத்தி குஜராத்தி குருமுகி என்பவையேயாம். இன்னும் இவற்றிலிருந்து தோன்றிய சிறு சிறு பாஷைகளும் இருந்துகொண்டிருக்கின்றனவாயினும், நான் முக்கிய பாஷைகளையே குறித்தேன். இவைகளெல்லாம் ஸம்ஸ்க்ருத பாஷையையே தமக்குப் பிறப்பிடமாக உடையனவாக இருந்தாலும், அவ்வப் பாஷைகளினுடைய லிபிகளெல்லாம் இந்தியாவில் உள்ள பூர்விக லிபிகளின் திரிபுகளாகவே தோன்றுகின்றன. வர வர இந்தப் பாஷைகளெல்லாம் தாம் தாம் சிறப்படைந்து தத்தமக்கு வெவ்வேறு இலக்கணங்களையும் உச்சரிப்புக்களையும் லிபிகளையும் ஏற்படுத்திக்கொண்டு அதிக வேற்றுமைகளை யடைந்து விட்டன.

இந்த நாகரிப் பிரசாரிணி ஸபையானது இத்தகைய ஆரிய பாஷைகட்கெல்லாம் பொதுவான லிபியைப்பெறும் குறிப்பை யுடையதாக இருப்பதால், அந்தப் புது லிபியில் எழுதப்பெறும் புஸ்தகங்கள் எல்லா ஆரிய பாஷைகளைப் பேசும் ஜனங்கட்கும் எளிதிலறிபக்கூடியனவா யிருத்தல்வேண்டும். இவ் விஷயத்தில் நாமெல்லோரும் ஒருமனப்பட்டிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன்; ஆனால் அத்தகையதொன்றைக் கலந்தாலோசித்து வாதம் செய்து தீர்மானிக்கும்போது சிரமம் அதிகமாக ஏற்படக்கூடும். ஏனெனில், பங்காளிகள் தங்களது லிபியே மிகப்பழையதென்றும் குஜராத்தியர் தமது லிபியே பூர்விகமானதென்றும் மராத்தியர் தங்களுடையதே புராதனமானதென்றும் வாதிட்டுத் தங்கள் தங்களதுதான் பொதுலிபியாயிருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தல் கூடும். இப்போது அச்சுப் புத்தகங்களிற் காணப்படுகிற லிபியாகிய தேவநாகரி லிபியே மிகப் பழையதென்றும் அந்த லிபியே பொதுவாயிருத்தல் வேண்டுமென்றும் சிலர்வற்புறுத்தலும்கூடும்.

கேவலம் சரித்திர காலக்குறிப்பினை யடிப்படையாகக் கொண்டே நாம் எடுத்துக்கொண்டிருக்கும் வாதத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. சிலர் சாஸன ஆராய்ச்சியிற் புகுந்து பார்க்கும்போது, குறைந்தது பத்துவகையான லிபிகள் பற்பல காலங்களில் உபயோகிக்கப்பட்டிருத்தலைக்காணலாகும். இது அசோகன் காலமுதற்கொண்டு ஆராயும்போதே நன்கு புலனாகின்றது. அந்தக்காலத்திலேயே கரோஷ்ட்ரீ அல்லது பிராம்ஹீ என்னும் லிபியே மிகப்பழையதாக எண்ணப்பட்டுவந்தது. அதற்குப்பின்னர் எல்லா எழுத்துக்களுமே மிகப்பெரிய மாறுபாட்டை யடைந்து வந்திருக்கின்றன. ஆகையால், நாம் தற்போது உபயோகித்துவரும் பற்பல எழுத்துக்களும் பழையகாலத்திலிருந்த பல லிபிகளில் ஒவ்வொன்றின் திரிபாகவே இருந்திருக்கவேண்டுமென்று நன்கு தெரிகின்றது. இக்காரணம் பற்றியே பூர்விக சரித்திர காலக்குறிப்பை அடிப்படையாகக்கொண்டு ஒரு பொதுவான லிபியைத் தீர்மானித்து விடல் முடியாதென்பதை நான் முன்னம் குறித்தேன். இத்தகைய கஷ்டத்தை நிவ்ருத்தி செய்வதற்காக,

முன் ஒரு காலம் ஆலோசித்தபோது, நாம் எல்லோருமே ரோமன் லிபியைப் பொதுவாகக் கொள்ளலாமென்னும் ஆலோசனைவந்தது. அப்படி ஆலோசிப்பதற்கு அப்போது தக்ககாரணமிருந்தது. இந்த ஆலோசனையானது ஆசியரையும் ஐரோப்பியரையும் பாஷையில் ஒற்றுமைப்படுத்த முயன்றதேயாம். பெரியோர்களே! இந்த ஆலோசனையானது நகைப்புக்கிடமானதென்று எனக்குத்தோன்றுகிறது. ரோமன் லிபியிலெழுதப்பட்டுள்ள அக்ஷரங்களின் சப்தங்கள் நமது பாஷைகளின் தொனிகளைக் குறிந்தலில் சிறிதேனும் பொருந்தமுடையனவாக இல்லை; அப்படியிருந்தலும் முடியாது. ஆங்கில இலக்கணிகளே அந்த ரோம லிபியானது பூர்ண பக்குவமடையாததென்று தீர்மானித்திருக்கின்றனர். அதில் ஒரு எழுத்து சில சமயத்தில் இரண்டு மூன்று சப்தங்கட்கு உபயோகப்படுவதாகவும், இரண்டு மூன்று எழுத்துக்கள் சிலசமயங்களில் ஒரே சப்தத்தைக் குறிக்கக் கூடியனவாகவும் இருக்கக் காண்கிறோம். நமது பாஷைகளிலுள்ள சப்தங்களையெல்லாம் சரியானபடியாக, வேறு யாதொரு விசேஷக்குறியிடுமில்லாமலே தெரிவித்திடும்படியாக ரோமன் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களைத் திருத்தப் புகும்போது நமது அறியாமை நன்கு புலப்பட்டு நகைப்புக்கிடமாகுமல்லவா?

நமக்கெல்லாம் பொதுவான லிபியொன்றிருக்கவேண்டுமானல் ரோமன் லிபியைக்காட்டிலும் பக்குவமடைந்த லிபியாயிருத்தல் வேண்டும். ஐரோபாவிலுள்ள எல்லா வகையான நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களைக் காட்டிலும் ஸம்ஸ்க்ருத நெடுங்கணக்கெழுத்துக்களே அதிகப்பக்குவ மடைந்ததென்று ஐரோப்பிய ஸம்ஸ்க்ருத வித்வான்களே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த விவரமான அபிப்பிராயத்தை நமக்கு முன்னுல் வைத்துக்கொண்டு இந்தியாவிலுள்ள எல்லா ஆரிய லிபிகட்கும் பொதுவான தொன்றைத்தேட அயலகத்துக்குப் போவது தற்கொலைசெய்து கொள்வதற்கொப்பாகும்.

ஸம்ஸ்க்ருத இலக்கணியாகிய பாணினியால் வகுக்கப்பட்ட நெடுங்கணக்கில் எழுத்தும் தொனியும் பொருந்தியிருப்பதுபோல்

உலகத்தில் வேறெந்த பாஷையிலும் காணக்கிடைக்காதென்பது திண்ணமாகும். இதனாலே தான், தேவநாகரி லிபியானது நாம் உபயோகித்துவரும் பற்பல விதமான பாஷைகளின் சப்தங்களையும் தெரிவிக்கக்கூடியபடி ஒத்து ஒலிக்கின்றது. கிழக்குப் புண்ணிய நூல்கள் (The Sacred Books of the East) என்னும் பதிப்புத் தொடரில் வெளியாயிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்தையும் ஒத்திட்டுப் பார்த்தீர்களானால் இந்த உண்மை புலனாகலாம். நாம், நம் பாஷைகளில் ஒரு சப்தத்துக்கு ஒரு எழுத்தும், ஒரு எழுத்துக்கு ஒரே சப்தமும் குறிக்கக்கூடிய நெடுங்கணக்கையுடையவர்களாக இருக்கிறோம். ஆகையினால், எந்த நெடுங்கணக்கை நாம் ஏற்றுக்கொள்ளலாம் என்னும் ஆலோசனையில் மாறுபட்ட அபிப்பிராயம் நமக்குள் இருக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. தேவநாகரி நெடுங்கணக்கே அந்தகைய சிரேஷ்டத் தன்மையையுடையதாயிருக்கின்றது. நமது நோக்கமோ பற்பல மாகாணங்களிலுமிருக்கிற பல வேறு நெடுங்கணக்குகளையும் எழுதக்கூடிய லிபியொன்று வேண்டுமென்பது. இத்தகைய காரியமொன்றை ஸாதித்தல் சுலபகாரியமல்லவென்று நான் முன்னரே தெரிவித்திருக்கிறேன்.

லார்டு கர்ஸன் ஒரு பொதுக்காலத்தை ஏற்படுத்திக்கொடுத்த மாதிரி, நாமும் ஒரு பொது லிபியை விரும்புகிறோம். நல்லது, லார்டு கர்ஸன் நமக்குப் பொதுவாக ஒரு லிபியை நமது சுதேசிய ஒழுங்குக்கேற்ப ஏற்படுத்திக்கொடுக்க முயன்றிருந்தாரானால், அவர் பொதுக்காலத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையைக்காட்டிலும் திருப்தியான காரியமாக மதித்திருப்போம். அப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. நாமே, நமது மாகாணப் பிரிவினைகளையெல்லாம் விட்டுக்கொடுத்து, செய்துகொள்ள வேண்டியவர்களாகவிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் தத்தமது பாஷையும் லிபியும்தான் உயர்வு என்பதை எண்ணிக்கொள்ளாமல் ஒரு மனப்பட்டு ஒரு பொது நன்மையை முடிவுக்குக்கொண்டு வருதல்வேண்டும். எந்த லிபியைப் பொது லிபியாகக் குறிப்பதாயிருந்தாலும் அது எழுதுவதற்கு சுலபமாயும் கண்கட்கு அழகாயும் விரைவில்

எழுதவல்லதாயுமிருத்தல் வேண்டும். நிர்மாணிக்கப்பட்ட எழுத்துக்கள் ஒலிக்கும் தொனிகளைத் தாராளமாகக் குறிக்கக்கூடியவையாகவுமிருத்தல் அவசியம். அவைகள் ஆரிய பாஷைகளின் ஒலிகளையும் திராவிட பாஷைகளின் ஒலிகளையும் யாதொரு விசேஷக் குறியீடுமில்லாமலே விளக்கக்கூடியனவாயிருத்தல் வேண்டும். ஒரு ஒலிக்கு ஒரு எழுத்தும் ஒரு எழுத்துக்கு ஒரு ஒலியுமே இருத்தல்வேண்டும். இதுதான் பூர்ண பக்குவமுடைய—எப்பாஷைகட்கும் ஒத்ததான பொது லிபியென்று நான் பொருள் கொண்டிருக்கிறேன். நாம் எல்லோரும் கலந்து பொறுமையுடன் ஆராய்ந்து பார்த்தோமானால், அதிகக் கஷ்டமில்லாமலே வெற்றியடைந்து விடலாமென்று நான் நினைக்கிறேன். இத்தகைய நிர்மானமான ஆலோசனையில் நாம் புகும்போது ஒரு உண்மையைக்கடைப்பிடித்துப் புகுதல் அவசியமானது. அதாவது, இந்தியாவிலுள்ள பல் வேறான லிபிகளுக்குள் எந்த லிபியானது, இந்தியாவின் அதிகப் பரப்பிலுள்ள ஜனங்களுடைய வழக்கத்திலிருக்கிறதென்பதையே நன்கு தெரிந்துகொள்ளல்வேண்டும். இத்தகைய லிபியானது நாம் காட்டிய சிறு காரணங்கட்கும் ஒத்துவருமானால், அதுவே பொது லிபியாகுமென் றேற்றுக்கொள்வதில் தடையிராதென்றெண்ணுகிறேன்.

நீங்கள் இவ்விஷயத்தைத் தீர்மானித்துக்கொண்டு வந்துவிட்டீர்களானால், நாம் அரசாங்கத்தை வற்புறுத்தி, ஒவ்வொரு மாகாணத்திலும் தேசபாஷாப் புஸ்தகங்களிற் சில பாடங்களை இந்தப் பொது லிபியிலே அச்சிடும்படியாகச் செய்துகொள்ளலாம்; அதனால் அடுத்த தலைமுறை மாணவர்கட்கு பள்ளிக்கூடக்காலத்திலிருந்தே அந்த லிபி பழக்கத்துக்கு வந்துவிடக்கூடும். புதிய எழுத்தொன்றைக் கற்றுக்கொள்ளுதல் ஒரு சிரமமான காரியமாகாது; ஆனால் ஒருவர், பள்ளிக்கூடக்காலங்கட்குப் பின்னர் கற்றுக்கொள்வதாயின் சிரமமாகத்தானிருக்கும். இந்த சிரமம் நான் சொன்ன முறையில் இருக்கமாட்டாது; ஆனால் இதற்கு அரசாங்கத்தின் உதவி வேண்டியிருக்கிறது. அவர்கள் உதவமாட்டார்களென்றெண்ணுதற்கு, இது ராஜீய விஷயமல்ல; எல்லாம் ராஜீயந்தானெ

ன்று சொல்லப்புகுந்தாலும் நமக்குப் பொதுவான காலப்பிரமாணத்தையும் அளவுப்பிரமாணத்தையும் ஏற்படுத்திக்கொடுத்த அரசாங்கமானது, "பொதுவான லிபியொன்றை ஏற்படுத்திக் கொண்டோம். ஸம்மதி கொடுங்கள்." என்று கேட்டால் அதற்கு மறுத்து விடுமா?

இந்தப்பொது லிபியானது நிர்த்தாரணம் செய்யப்பட்டதானால், ஒருவர் அந்த லிபியில் எழுதியிருக்கும் எப்பாஷைகளையும் தெரிந்து கொள்ளுதலில் யாதும் சிரமமிராது. லிபியைத்தான் கற்றுக்கொள்ளல் சிறிது சிரமமாகலாம். என்னால் இப்போது பங்காளிப் புஸ்தகத்தைப் படிக்கமுடியாது; ஏன்? எனக்குப் பங்காளி எழுத்துக்கள் தெரியாததே காரணமாகும்; ஆனால், அந்தப் பங்காளி பாஷை எனக்குத்தெரிந்துள்ள தேவநாகரி லிபியில் எழுதப்பட்டிருக்குமானால், நான் அந்தப்புஸ்தகத்தின் பெரும்பாகங்களைத் தெரிந்துகொள்ளல் முடியும். கதையின் கருத்தையாகிலும் நன்றாய்த்தெரிந்து கொண்டுவிடல் எளிதாகும். ஏனெனில், எல்லாப் பாஷைகளிலுமே ஸம்ஸ்க்ருதச் சொற்கள் பொதுவாகப்பரவியிருக்கின்றன. நாம் மேல் நாடுகளிலிருந்து புதுப்புதுக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் முற்பட்டிருக்கிறோம். அந்தக்கொள்கைகளைத் தெரிவிப்பதற்குப் புதுச்சொற்களை நமது தாய்ப்பாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்தினால் ஏற்படுத்திக்கொள்ளுதலும் ஸாத்யமாகும். இங்கே, எல்லாருக்கும் பொதுவானதொரு பாஷையை ஏற்படுத்த வேண்டிய அவசரத்திலிருக்கும்போது, இந்தஸபையார் விஞ்ஞான சாஸ்திரப் பதங்களையெல்லாம் தெரிவிக்கக்கூடிய ஒரு அகராதியைப்பொதுவான ஹிந்திபாஷையில் தயாரித்துக்கொண்டிருப்பதைக்கேட்டு ஆனந்திக்கிறேன். இது நல்ல காரியந்தான். இவ்விஷயத்தைப் பற்றியும் சில சொல்ல எனக்கு ஆசையுண்டு. என்றாலும் எனக்குப் பின் பல பெரியோர்கள் பேசவேண்டியிருத்தலால், அவர்களுடைய அருமைப்பொழுதிலும் நான் ஆக்ரமித்துப் புகல் தகுதியல்லவாகையால், உங்களது அநுமதியின்பேரில்,நான் எனது உபந்யாசத்தைப் பூர்த்திசெய்து கொள்கின்றேன்.

மோ. வே. கோவிந்தராஜய்யங்கார், காரைக்குடி.

தாய்மொழியை வளர்த்தல்.

வணக்கம்.

தண்டமிழென் றாயுன் சரணந் தனைப்பற்றித்
தொண்டனியா னென்றுந் துணையாகக்--கொண்டனனால்
வந்தடியேந் தன்னை வளர்க்கும் வகையறியத்
தந்தருள்வாய் நின்செந் தமிழ்.

முன்னை முனிவருள் முத்தமிழை முற்றுமுணர்ந்
தென்னை யினைத்தமைந்தோ னெம்பிரான்—பின்னைவாழ்
நாராயணன் பதத்தை நாடி நயந்துரைப்பேன்
பாரா யணிகள் பரிந்து.

முன்னுரை.

தண்டமிழ் மொழியைத் தம்முயர் மொழியாக்
கொண்டிவண் குழுமிய குணப்பெருங் குன்றனீர்,

அடியேன் முதற்கண் ஒன்றற்கும்பற்றாத அடியேற்கு இப்பணியைக் கொடுத்தருளுமாறு திருவருள்பாலித்த ஆண்டவனுக்கும், அங்ஙனமே 'தங் கூடிய அகில இலங்கா தமிழ் மகாசனசபை' அங்கத்தினர்க்கும் வணக்கத் தோடும் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால், ஆண்டவ னுக்கும், அவனுடைய படைப்புக்களுக்கும் வழிவழித்தொழும்பு பூண்டொ ழுகும் உரிமையினையும் கடமையினையும் கொண்டுள்ள மக்கள் வகுப்பின ருள் ஒருவனாகிய அடியேனால், இத்தகைய நன்றியினைச் செய்தார்க்கு உள் ளன்புடன் வணக்கத்தைச் செலுத்த இயலுமேயன்றிப் பதிலாக எதும் கைம்மாறு செய்ய இயலாது என்பது ஒருதலை. என்றாலும், பிறப்புரிமை யின் பயனாக அடியேற்குக் கிடைத்த அப்பணியை, அடியேன் நுங்கள் ஆணையைச் சிரமேற்கொண்டு இயன்ற அளவு நிறைவேற்ற முயலுவதால் அதனையும் செய்தவனாகப் பார்க்கிறேன். 'குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த' நுங்கள் கடன்மையாம்.

தொடக்கம்.

இனி, இத்தலைத்தொடர் 'மொழி என்பது யாது? தாய்மொழி என் பதன் பொருள் என்னை? நமது தாய் மொழி யாது? அதன் தொன்மையும் மேன்மையும் எத்தகையன? வளர்த்தல் என்பது யாது? வளர்த்தற்குரியவர் யாவர்? எங்ஙனம் வளர்த்தல்வேண்டும்? என் வளர்த்தல் வேண்டும்? வளர்க் காவிடில் வரும் இழுக்கு என்னை? வளர்த்தலால் வரும்பயன் யாது?' என்ற

பல பகுதிகளைக்கொண்டு கூறுவதால் ஒருவகையாக விரித்துரைக்கப்படலாம்; ஆதலின், அடியேனும் அம்முறையிற் சிறிது கூறுவேன்.

மொழி.

இது, மக்களாவார்க்கு ஒருவர் கருத்தைப் பிறிதொருவர்க்குத் தெரிவிக்கத் துணைபுரிவது; அவர்களை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவது; சான்றோர் பலரும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அறிந்த பெறலரும் உண்மைக் கருத்துக்களைத் தாம் உணர்வது மாத்திரம் அன்றித் "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந் தார்." என்றபடி பிறர்க்கும் அறிவித்து அவரையும் பயன்படச்செய்யும் பெருமையினை ஒவ்வொருவருக்கும் தரவல்லது; செவிப்புலனும் அணுவாகிய ஒலிநுட்பங்களால் உண்டாவது; உலகினரால் மொழியப்படுவது.

தாய் மொழி.

உலகம் பலவேறு நாடுகளாக அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக்கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்துகொள்ள வேண்டியதும் இன்றியமையாததொன்றும். ஆதலின், அம்முறையில் ஒவ்வொரு நாட்டினரும் தாம்தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும் தத்தம் இயற்கைக்கும், அறிவுக்கும், நாகரிகத்திற்கும் எற்றவாறு ஒருவரோடொருவர் அளவளாவத்தக்க வகையில் தனித்தனி மொழிகளைப் படைத்துக்கொள்வாராயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும் படைத்துக்கொண்ட மொழியே அந்த அந்த நாட்டினருக்குத் தாய்மொழியாவது. இதனை நாட்டுமொழி, நிலத்து மொழி என்றும்; தேசபாஷை என்றும் கூறுப. "நாம் குழவிப் பருவந்தொட்டுப் பயின்றுவந்தது; பாலோடு அருந்தி, சோறோடு அயின்று, துயிலோடு உறங்கியது; இன்பிலும் துன்பிலும், யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது" எனக்கூறிச்சிறப்பிப்பர் அறிஞர், வே. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள். "தாய்மார்கள் இயல்பாகப்பேசும் மொழிகளே தாய்மொழிகளாம்" என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினர் மகாத்மாகாந்தி அடிகளார்.

நமது தாய்மொழி.

நாம் என்ற சொல்லுக்குப் பொதுவாக 'உலகத்துத்தோன்றிய மக்களாகிய நாம்' என்ற பொருள் கூறப்படலாம். எனினும், இங்கு, அடியேன் இதற்குக்

கொண்ட பொருள் 'தண்டமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழர்களாகிய நாம்' என்பதேயாம். இதுபற்றித்தான் அடியேன் நுங்களை முதற்கண் 'தண்டமிழ்மொழியைத் தம்முயர் மொழியாக்—கொண்டிவண் குழுமிய குணப்பெருங் குன்றனீர்' என விளித்ததூஉம். இதுகொண்டே கடவுளருளால் நமக்குத் தாய்மொழியாக அமைந்துள்ளது "அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கு" என அறிஞர் சுந்தரம்பிள்ளை அவர்களாற் சிறப்பிக்கப்பெற்ற செந்தமிழ் மொழியாம் என்பதும் போதரும்.

தமிழ்மொழியின் தொன்மையும், மேன்மையும்.

செந்தமிழாம் தெய்வமணங்கமழும்நமது தாய்மொழியோ பலவாய அரிய கருத்துக்களையும் எளிய நடையில் எவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும், அது நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களை மாபுநிலைதிரியாது எவரையும் இனிது உணர்ந்துகொள்ளச் செய்யவல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும், நவிலுந்தோறும் புதுப்புதுக்கருத்துக்களைத் தோற்றுவிப்பதும் ஆகிய தொல்காப்பியம் முதலிய பலசிறப்பட்ட இலக்கண நூல்களையும்; இபற்கையின் வனப்பை இற்றெனத் தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப்புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினோருடைய அரியசரித்திரங்களை வரலாற்றுமுறையுடன் அறியத் துணைசெய்யக்கூடியனவும் ஆகிய நற்றிணை, பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகை நூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச்சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில் விளங்குமாறு எடுத்து இடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப் பக்குவப்படுத்தி வருவதும், வடமொழி அங்கிலம் முதலிய பல மொழியாளரும் மொழிபெயர்த்துக்கொள்ளும் பெருமையினைப் பெற்றதும், எம்மதத்தினரும் தம்மதத்தினது எனப் போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள்போன்ற பல நீதிநூல்களையும்; புதுப் புதுக்கற்பனைகள் நிறைப்பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம் போன்ற பல பெருங்காப்பியங்களையும்; உள்ளதை உள்ளவாறு கூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம் தொண்டர் புராணம் போன்ற தனித்தமிழ்ச் சரிதநூல்களையும் 'சிந்தைக்கினிய செவிக்கினிய' ஆகவும், 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினராற் பெரிதும் போற்றப் படுவனவும், படிக்குந்தோறும் படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயிர்க்கூச்செறிந்து ஆனந்தக்கண்ணீர் சொரியும் வண்ணம்;

செய்து வருவனவும், பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பெருக்கெடுத்து வெள்ளம் போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப்பிரபந்தம், திருவருட்பாப் போன்ற அருளிச்செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதிநூல்களையும்; இலக்கணங்களையும் காப்பியங்களையும் பிறவற்றையும் கற்றற்குத் துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிபுகளையும், கருத்துக்களையும் தம்மகத்துக்கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவையிற்றை வரலாற்று முறைப்படி எளிதிற் புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர்பிரபந்தத்திரட்டு, சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம் போன்ற பல சிறுகாப்பியங்களையும்; தண்டமிழ் மூதாட்டியாம் ஔவைப்பாட்டியாரின் பலதிறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞானநூல்களையும்; மருத்துநூல்களையும்; சோதிடநூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தன்பால் மொழிபெயர்த்துச் சேர்த்துக்கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும், அது, தன்னைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் அரசரையும்; பல ஜமீந்தார்களையும்; பல மடாதிபதிகளையும்; பல நூறு பெரும்பொருளாளர்களையும்; சற்றேறக்குறைய இருநூறுலட்சம் மக்களையும்; பலதர்மஸ்தாபனங்களையும்; பலகழகங்களையும்; பல ஸ்தலசுயஆட்சி ஸ்தாபனங்களையும்; இரண்டு துரைத்தனங்களையும்; தினசரி, வாரம் மும்முறை, வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை, மாதம் மும்முறை, மாதம் இருமுறை, மாதம் ஒருமுறை ஆக வெளிவந்து மக்களது அறிவு ஆற்றல்களைப் பல துறைகளிலும் காலத்திற்கேற்றவாறு உயர்த்திவருகின்ற பல பத்திரிகைகளையும்; பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம்மட்டோ அதன் பெருமை? அஃது இவ்வளவோடு நில்லாது வளர்வதற்கும் வளர்ப்பதற்கும் தகுதியாகப் பெருமை பொருந்திய, உலகவழக்கிலுள்ள, பேச்சு வழக்கு மொழியாகவும் இருக்கின்றது. இங்கு, இதைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பலகூறலாம். எனினும். அடியேன் அங்ஙனம்கூறி உங்களது மேலான உயிரினுஞ்சிறந்த காலத்தைக் கொள்ளைகொள்ளத்துணியமாட்டேன். ஆதலின், இதனைப்பற்றிச் சில ஆண்டு (1920) களுக்கு முன்னர்த் திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்ற 'சென்னை மாகாணத்தின் இரண்டாவது தமிழ்ப்பண்டிதர் பெருங்கூட்டம்' தொடங்குங்கால் அதன் வரவேற்புக் கழகத்தலைவர், ஆண்டுக்குழுமிய புலவர் பலர்க்கும் நல்வரவு கூறுகையில் மொழிந்தவற்றுள் சிலவற்றைக் குறிக்கின்றேன். அதுவருமாறு:—

"நமது தமிழ்மொழியோ மக்களது காலக்கணக்கைக் கடந்ததொருபழங்காலத்திலேயே ஒரு சீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடையோர் எனப்படும் பாபிலோனியர், எகிப்தியர், யவனர் முதலாயினோரும் தொன்மையை நோக்கின் தமிழை வென்றவர்களல்லர். உலகந்தோன்றியது தொடங்கி

கடலின்றி நிலைத்திருப்பதாகக் கண்டவரையும் கேட்டவரையும் மலைக்கச் செய்வதும், ஈடும் எடுப்பும் அற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாக உள்ளது என யாவராலும் ஒப்ப வியந்து கூறப்படுவதும் ஆன பெருமைபெற்ற மலையுந் தோன்றுதற்கு முன்னரே தான்தோன்றித் தனிச்செங்கோல் ஓச்சியது தமிழ்மொழி என்னின், இதன் பழமையை ஆராய வல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்துகிடக்கும் தென்றிசை முழுதும் நிலப்பரப்பாய் விரிந்திருந்ததொன்று அந்நிலப்பரப்பில் வழங்கிவந்தது நமது பழந்தமிழே ஆகும். அவ்வாறு பரந்துகிடந்த பெருநிலப்பகுதிதான் இவ்வுலகத்து முதல் முதல் தோன்றிய நிலப்பகுதியென்றும், அந்நிலப்பகுதியிலேதான் மக்கள் முதல் முதல் தோன்றினார்கள் என்றும், இப்பொழுதைய பழங்கலைப் புலவர்கள் பலரும் அறிவிக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந் தமிழ் மொழியே கைக்குறியால் கருத்தை விளக்கி வந்த மக்களது நாவை உணர்த்தியசைய இயக்கி ஒலிக்குறியாய் எழுந்த முதல் மொழி என்பது பெறப்படுகின்றது. இப்பொழுதைய மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்ச்சொற்களுக்கு இயைந்தனவாயிருப்பதும், செவ்வைபுறாத சில மொழிகளின் சொற்களும் அமைப்பும் (தமிழ்ச் சொற்களுக்கும், தமிழின் அமைப்புக்கும்) மிக நெருங்கிய தொடர்பைக்காண்பிப்பதும், தமிழ் ஒலிகள் இயற்கை ஒலிகளுக்கேற்ப அமைந்துள்ளதும், ஒரு பொருளைக் குறிக்கும் பல தமிழ்ச்சொற்கள் மக்களது அறிவுவளர்ச்சிக்கேற்ப ஒவ்வொருகாலத்தில் அவர்கள் கண்ட அப்பொருளினது ஒவ்வொரு தன்மையைத் தனித்தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பிப்பதும் மொழி ஆராய்ச்சியாளர் யாவர்க்கும் இதனது (நமது தண்டமிழ் மொழியினது) பழமையையும் என்றும் அழியாப் புதுமையையும் பொதுமையையும் விளக்கி (அன்னாரை) மகிழ்விப்ப ஆகும்" இஃதொன்றே ஈண்டைக்கு இப்பகுதியை விளக்கப்போதியதாம்.

(தொடரும்.)

குறிப்பு:—இஃது, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் வை. சா. வேங்கடராமய்யரவர்களால் எழுதப்பெற்று, "அகில இலங்கா தமிழ் மகாஜனசபையின்" ஆதரவில் யாழ்ப்பாணத்தில் டிசம்பர் (26-12-22) மாதத்திலே கூடிய தமிழ் அபிவிருத்தி மகா சமாஜத்தார் முன்னிலையில், வாசிக்கப்பெற்றது.

ஜீவகாருண்யச் சிந்து.

(உ)

சாமிக்குப் படைப்பென்பார்—அந்தச்
சாமியென்றால் நம்முடைய சிவமன்று
இறந்தவர் பெயர்சொல்லி—வீட்டில்
இருப்பவர் யாவரும் ஒன்றுசேர்ந்து
எண்ணெயிட்டுத் தலைமுழுகி—திட்டுமுதல்
ஏதுவுமில் லாமலே சுத்தர்களாய்
வீட்டினைத் தான்மெழுகி—ஆங்கு
வேண்டிய பலவுமே செய்துவிட்டு
உத்திரத்தில் தூங்குகின்ற—பழய
ஓலைப்பெட்டி தன்னையெடுத் தவர்வந்து
ஊருணியின் மருங்கணைந்து—பிரித்து
உள்ளிருக்கும் வேட்டியொடு புடவைகளைத்
தண்ணிரி லேயமுக்கி—ஆசாரத்
தனுக்கெல்லாம் காட்டியே காயவைத்து
வீட்டினிற் கொண்டணைவார்—துவைத்த
வேட்டியாற் சாமியென் றுருவமைப்பார்
குறையொன்று மில்லாராய்—பிறர்க்குக்
கோதொன்றுஞ் செய்யாத கோழியினத்தைக்
கழுத்தினிற் கைபோட்டு—சுற்றிக்
கறகற வென்னவே முறித்திடு வார்
கொன்றவொரு கோழிதன்னை—அடுப்பில்
கூசாமல் வாட்டியே அரிந்தெடுத்துக்
குழம்புகள் செய்திடுவார்—அதனைக்
கொண்டுபோய்ச் சாமியின் முன்னிலையில்
ஆரவே படைத்திடுவார்—நன்கு
அழகாகச் சாம்பிராணித் தூப மிட்டுத்
தேங்கா யுடைத்து வைத்து—வீட்டுத்
தெய்வமென்று பூசைகள் செய்திடுவார்
முட்டைதன்னைத் தானுடைத்துச்—சட்டியில்
மொறுமொறு வென்னவே வார்த்திடுவார்

தோசைமாவொடு கலப்பார் — அதனைச்
சுட்ட தோசை மெத்த நசி யென்றுரைப்பார்
தோசையையும் வைத்துப் படைப்பார் — பிறரையும்
சூழ்ந்துநின்று கும்பிடென்று வம்புகள்செய்வார்
பங்காளி தோஷமென்பார் — இது சுத்தப்
பாழான முறையென்ப துணரமாட்டார்
ஐயவோ பெரியோரே! — இதைவிட
அநியாயம் வேறென்று வேண்டுவதோ
குப்பைதனைக் கிளறிவிட்டுப் — பொறுக்கிக்
குடல்வளர்த் திடுமொரு கோழிதன்னை
அறிவுடை மாந்தர்களும் — உடலில்
ஆஹாரவென்று திரு நீறுமிட்டுப்
பஞ்சாக்ஷரம் செபித்து — வாழும்
பாங்களுங் கலந்திதை யுண்டிடுதல்
மற்றுநன் முறையாமோ — நாற்ற
மலந்தின்னுங் கோழியை மயிர்பறித்துக்
கலத்திலிற் போட்டவித்து — இலையிற்
காணவே பள்ளயம் விரித்துவிட்டு
விழுந்துமே கும்பிடுதல் — இதைவிட
வேறென்ன பாவம் வேண்டுமையா
சிவசிவ சிவசிவ சிவவென்று — நன்கு
செப்பிடும் நாவினில் தீக்கறியை
வைத்துமே சுவைத்திடுதல் — சைவத்தின்
மாண்புறு பெருமையை வதைப்பதன்றோ?
உங்களைப் பெற்ற முன்னோர் — முன்பு
உண்டபுலாற் பாவத்தைத் தொலைப்பதற்கு
என்னென்ன ஜன்மத்திலோ — இப்போ
திருக்கின்றா ரென்பதுவுந் தெரியவில்லை
ஈடேற வொட்டாமல் — அவர்களை
எப்போதும் நரகத்தில் அழுத்துதற்கு
மேலுநீங்கள் கோழிபறுத்து — ஐயோ!
வீணாகப் பாவத்தை மூட்டைகட்டி

அனுப்புதல் முறைபாமோ—இந்த
ஆகாத உதவிக்கோ பிள்ளைகள்பெற்றார்
அநியாயப் பூசைவேண்டாம்—பெற்றோர்க்கு
அன்போடு பூசைசெய்ய வேண்டுமென்னில
பலகார வகைபலவும்—இனிய
பருப்பொடு சர்க்கரை தேங்காயும்
சோறொடு மாக்கறியும்—பசுவின்
துப்பால் நெய்யொடு கனிவகையும்
வைத்துமே படைத்திடுவீர்—இன்னும்
மாண்புறு கருமங்கள் செய்துபலனை
அவர்கட்குச் சேரவனுப்பி—நல்ல
அறநெறி சேர்ப்பது கடமையன்றோ
இந்தவிதம் செய்திடுவீர்!—இறைவன்
எப்போதும் உங்களைக் காத்திடுவார்
முன்னோருங் கதிபெறுவார்—உலகம்
முழுமையும் வாழ்ந்திட வழியிதுகாண்.

சோ. முரு.

காந்தியடிகள்.

ஆற்றல் நிறைந்தவெம அம்மான் கண்டாய்
அன்புசால் நெறிகண்டாய் அண்ணல் கண்டாய்
போற்றுகதராடைப் புனிதன் கண்டாய்
பொறுமையின் றிறங்கண்டாய் புவியோ ரெல்லாம்
எற்றுபுகழ்படைத்த எம்மான் கண்டாய்
இந்தியர்நம் வாழ்விற்கா எழுந்தான் கண்டாய்
சாற்றுபுகழார்போர் பந்தர்மேவும்
தண்ணளியார் காந்தியெனுந் தலைவன் றானே.

துரிசற்ற மக்கட்குத் தோழன் கண்டாய்
தூய்மைசால் நெறிகண்டாய் துறவி கண்டாய்
பரிசுத்த வாழ்வில்லம் பரிப்பான் கண்டாய்
பாருற்ற எளியாரின் அடியான் கண்டாய்
தெரியாத உயிர்களிடங் கருணை காட்டிச்
சிறைபுகுந்து வாழ்வளித்த செல்வன் கண்டாய்
சரியான வழியிதென்று நடந்து காட்டும்
தண்ணளியார் காந்தியெனுந் தலைவன் றானே.

சோ. முரு.

சதங்கையொலி.

நாணயத்தின் அளவு.

ஜெர்மனி தேசத்தில் மார்க் நாணயவிஷயம் மதிப்பற்றுக் கெட்டதைப் பற்றிச் சென்ற மாதம் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்பை நேயர்கள் வாசித்திருப்பார்கள். நாணய விஷயத்தைப்பற்றிச் சென்றவாரத்துத் தமிழுலகு பின்வருமாறு கூறுகிறது:—“நாணயங்களை அரசாங்கத்தாராகவே வெளியிட்டு ஜனங்களை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த முடியாது. பொன் வெள்ளி நாணயங்களை அவைகளில் பொருந்திய சில அரிய உபயோகங்களைக்கொண்டு ஜனங்களே வியாபாரத்திற்குதவும் சாதனங்களாகச் செய்து கொண்டார்களேயல்லாது அரசாங்க நிர்ப்பந்தத்தால் அவைகளை அங்கீகரிக்கவில்லை. நாணயங்கள் எப்போது அவைகளின் உபயோகத்தைச் செய்யச்சக்தியற்றதாக ஆகிறதோ, அப்போது அந்நாணயங்களை நிராகரித்துவிட்டு வேறு தகுந்த சாதனங்களைக் கைக்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை” நாணயத்தை கவர்ன்மெண்டார் கைக்கொண்டு வெளியிட்டு வருவது ஜனங்களின் நன்மையின் பொருட்டேயாம். அந்த நன்மையை விட்டுத் தங்கள் நன்மையை அரசாங்கத்தார் கருதி நாணயங்களை வெளியிடுவார்களானால் நாணயத்தின் செலாவணி தொலைந்து போகாமல் என்ன செய்யும்? ஜெர்மன் அரசாங்கத்தார் கணக்கற்ற நோட்டுகளை வெளியிட்டு மார்க்நாணயத்தின் மதிப்பைக்குறைக்க முற்பட்டதன் பயனாக அங்குள்ளவர்களும் பிறநாட்டினரும் அதனை உபயோகமற்ற காகிதமாக்கிவிட்டனர்.

கதரின் வெற்றி.

“இந்தியாவிலுண்டாகியிருக்கும் கதர் இயக்கங்காரணமாக ஜப்பானிலுள்ள பருத்திமில்களுக்கும் பெரும் ஆபத்து உண்டாகியிருக்கிறது. இந்தியாவின் தேவையை நம்பியே அவைபிழைத்துவந்தன. நஷ்டம்அதிகமாகவந்துவிட்டபடியால் சிறியமில்கள் கடனில் முழுகிப்போகக்கூடிய நிலைமையிலிருக்கின்றன. பெரியமில்கள்ஏராளமானலாபங்கொழித்துப் போதியதொகையைக் கையில் வைத்திருப்பதால் வேறு தொழில்களில் பணத்தைப்போடலாமாவென்று யோசித்து வருகின்றன” என்று செய்தியெட்டுகிறது. இப்போது நமது நாட்டில் கதருடுத்துவோரும் கதர் நூல் நூற்பவரும் மிகச்சிலரேயாவர்.

இந்த நிலையில் ஜப்பான் மில்கள், தலையில் கைவைத்து அழ ஆரம்பித்து விட்டன. அவைகட்கு இதுவரை கிடைத்துவந்த லாபம் முற்றும் இப்போது இந்தியருக்குக் கிடைத்துவிட்டது. இன்னும் கதரியக்கம் வலிமைபெறுமானால் இந்தியர் பெறும் லாபம் எத்துணையாகும்? இந்தச்செய்தியையறிந்த பின்னராவது நமது நாட்டு ஜனங்களும் போலித்தலைவர்களும் நூல் நூற்கவும் கதருடுக்கவும் முன் வருவார்களா? கதரியக்கம் வெற்றியுற்று வருவதற்கு மகிழ்ச்சியுறுகின்றோம்.

ஹிந்துமதஸ்தாபன நிர்வாக மசோதா.

சென்றவாரம் கூடிய சென்னைச் சட்டசபையில் மதஸ்தாபன நிர்வாக மசோதா வென்று ஒரு மசோதாவை கனம் மந்திரி இராமராய நிங்காரால் கொண்டுவரப்பட்டுப்பரிசீலனைக்கமிட்டியின் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கிறது. இதன் நோக்கங்களிற் சில வருமாறு:—“ஒவ்வொரு மதஸ்தாபனத்திற்கும் ஒவ்வொரு கமிட்டி நியமிக்கப்படுமாம்; அதில் அரசாங்கத்தாரும் சில அங்கத்தினரை நியமிப்பார்களாம்; அவைகளின் சரியான நிருவாகத்திற்குச் சில விதிகள் ஏற்படுமாம்; அந்தந்த ஸ்தாபனங்களின் செலவு நீக்கிப் பாக்கியுள்ள பணங்களைக் கல்விக்காகவும் சுகாதாரத்திற்காகவும் போக்குவரவு வசதிக்காகவும் செலவழிக்கப்படுமாம்.” இது ஹிந்துமத ஸ்தாபனங்களைமட்டும் பற்றியதென்று தெரிகிறது. ஹிந்து தேவாலயங்களிலும் மடங்களிலும் பணம் ஏராளமாகவிருக்கின்றது, தர்மகர்த்தர்களும் பண்டாரசந்நிதிகளும் சரியாய் அவற்றை நிர்வகிக்கவில்லை யென்றெழுந்த கூக்குரலும், மேற்படி நிர்வாகிகளும் மடாதிபதிகளும் செய்த தப்பிதங்களும், பிறவுமே ஒரு உருவாகி இந்த மசோதாவாக எழுந்திருக்கிறதென்பது மிகையாகாது. “தற்போதுள்ள மதஸ்தாபனங்கள் சீர்கெட்டுக்கிடக்கின்றன. ஆனால் இவைகளைச் சீர்திருத்த அரசாங்கத்தார் யார்?..........மகாராணியார் சாசனத்திற்கு இம்மசோதா முற்றிலும் விரோதம்.” என்று நவசக்தி கூறுகிறது. இவ்வாறு சிலர் வெறுக்கின்றனர். சிலர் ஆதரிக்கின்றனர்; சிலர்திருத்தங்கூறுகின்றனர்.

தண்ணீர் கிடையாது.

சூரத் முனிசிபாலிட்டியாருக்கும் பொதுஜனங்கட்கும் யுத்தம்நடக்கிறது. வரி செலுத்துபவர் இருபத்தேழாயிரம்பேரில் இருபத்து மூவாயிரம் பேர் வரி கொடுக்கவில்லையாம். இன்னும் ஏழு நாட்களுக்குள் கொடுக்காவிட்டால் வீட்டிலுள்ள குழாய்களில் ஜலம் விடப்படமாட்டாதென்றும், பதினைந்து நாட்களுக்கெல்லாம் ஜப்திவாரண்டு பிறப்பிக்கப்படுமென்றும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. கக-வீட்டிற்குத் தண்ணீர் நிறுத்தப்பட்டுவிட்டது.

இதைப்பார்த்த பிறகு, ஊருணியிருப்பது நலமா? குழாய் வைத்துத் திருகி விடுவது நலமா? விளக்கெண்ணெய் விளக்கு நலமா? முனிசிபல் மின்சார விளக்கு நலமா? இப்படிப் பல எண்ணங்கள் நமக்குண்டாகின்றன.

அரியக்குடியில் சிவாலயம்.

அரியக்குடியில் மிகப்புராதனமான சிவன்கோயில் ஒன்று உளது. இது மருதுபாண்டியன் காலத்திற்கு முன்னரேயே கார்காத்த வேளாளரென்போர் வழிபாடுசெய்ததாம். இது பாண்டி மன்னர் ஆட்சியில் தோன்றியது என்று சிலர் சொல்லுகிறார்கள். இக்கோயிலிலுள்ளசிவலிங்கம், "ஓசையொலியெலாமானாய் நீயே." எனும் வாசகத்தின் பொருளாக விளங்குகின்றது. இப்பொழுது ஒருசிறு ஓட்டுக்கட்டிடத்தில் ஒருபரதேசியார் பூஜையில்இருந்து வருகிறது. அவ்வூர் நகரத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து, கோயிலைப்புதுப்பித்துப் பூஜை நைவேத்தியம் முதலியன சிறப்பாகச் செய்வதென நிச்சயித்து முதலில் பதினாயிரம் ரூபா செலவில் பணிசெய்வதென்று தீர்மானித்திருக்கிறார்களென்றறிந்து மகிழ்வெய்துகிறோம். திருப்பணி இனிது நிறைவேறுமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

மதிப்புரை

தனித்தமிழ்ப் பாக்கள்:—இது ஒரு செய்யுள் நூல். இதன்ஆசிரியர், ஸ்ரீமான் ஆனைமலை A. R. ஸ்ரீநிவாசமுதலியாரவர்கள். வெளியிட்டார், திருச்சி நாஷனல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்கள். இதில் பல அரிய அகவற்பாக்களும், இனிய எளிய வெண்பாக்களும், உள்ளன. விஷயங்கள் புதியனவாகவும் சிறந்தனவாகவும் இருக்கின்றன. தற்கால ஆங்கிலக் கலாசாலை மாணவர்களும், தனித்தமிழ் பயிலும் மாணவர்களும் அவசியம் படிக்கவேண்டுவது. இதன் விலை அணா ஆறே.

தருமசீலன்:—இம்மாதப்பத்திரிகையின் ௫-வது புத்தகம் முதல் ஏழுசஞ்சிகைகள் வரப்பெற்றோம். இவைகளில் நீதிமார்க்கத்தை விளக்கும் கட்டுரைகள் பல உள்ளன. கொல்லாமையைப்பற்றிய கட்டுரைகள் விரவியிருத்தலால் இது ஜீவகாருண்ய வளர்ச்சி கருதியுழைக்கும் பத்திரிகையெனத்தெரிகிறது. இதன் ஆசிரியர், தி. ஆதிசயினாரவர்கள். வருட சந்தா ரூபாய் ௧. விலாசம், மானேஜர், தருமசீலன் ஆபீஸ், 26 ஆச்சாரப்பன் தெரு, G. T., சென்னை.

மனோரஞ்சிதம்.

(குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc., எழுதியது.)

எனது பட்டம்:—மேலே குறிப்பிட்டுள்ள, "A. B. C. D. E. F. etc எனும் பட்டம் எனக்கு எப்பொழுது யாரால் கொடுக்கப்பெற்றது? அதன் அர்த்தம் என்ன?" என்று பல நண்பர்கள் வினவுகிருர்கள். பெரும் பட்டதாரிகள் எல்லோரும் சேர்ந்து, அநியாயமாக அரையணுத் தபால் முத்திரையை ஒரு அணு ஆக்கிவிட்டபடியால், ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதுதல் இயலாது என்று எண்ணி, இங்கே அவர்களுக்கு விடையளிக்கிறேன். ஒரு சிலகூட்டத்தாரே சிலருக்குப் பட்டம் கொடுக்கிருர்கள், அதுபோலவே எனக்கும் இப்பட்டத்தைச் ல நண்பர்கள் சூட்டினர்கள். பொதுவாகப் பட்டங்களுக்கு நாம் கொடுக்கிற கௌரவத்தைத் தவிரத் தற்காலத்தில் வேறு விசேஷமான அர்த்தம் என்ன இருக்கிறது? ஏறக்குறைய எல்லாப் பட்டங்களும் ஒருசில எழுத்துக்களாலேயே ஆக்கப்பெற்றிருக்கும். ஆனல் என்னுடைய பட்டமோ 26 எழுத்துக்களால் ஆக்கப்பெற்றிருக்கிறது. மற்ற பட்டதாரிகளுக்குக் கிடைப்பது படி. எனக்குக் கிடைப்பது (அச்சு) அடிதான். உலக நன்மை ஒன்றையே கருதி உழைக்கிறவனுதலால் அதைப்பற்றிக் கவலையில்லை!

வேட்டைதான்!:—மார்கழி மாதம் பிறந்து விட்டது! மனிதர்களுக்கு வேவு வந்துவிட்டது! மான் மரைகளுக்குச் சாவு வந்துவிட்டது! ஆடு கோழிகளுக்கு அவதி வந்துவிட்டது! வீடுகளிலெல்லாம் அம்மாவென அலறும் சப்தம் அதிகந்தான். நாலுகாற் பிராணிகள் இரண்டுகாற் பிராணிகள், நடப்பன பறப்பன இருப்பன எல்லாம் வேகின்றதனுல்தான் வேவு என்று வந்ததோ? ஆடுகிற வேட்டைகள் எல்லாம் ஆடட்டும். அகில உலக உயிர்ப்பிராணிகளிடத்தில் அன்புடையாரன்றே என்பு முரியர் பிறர்க்கு! என்பில் அன்புடையார் என் செய்வர்? நன்ருகப் பல்லில் வைத்து அழுத்தமாகக் கடிப்பர்.

கஷ்டந்தான்:—"நண்டு வாங்கலேயோ நண்டு" என்ற கர்ணகடூரமான வாசகம், நாகரிகத்தில் முதிர்ச்சிபெற்ற சென்னைநகரத் திருவீதிகளில் ஒதப்பெறும்பொழுது மிகக்கஷ்டமாக இருக்கிறதென்று லோகோபகாரி கூறுகிறது. சில சமயங்களில் இந்த பாகங்களிலே; "தலைவாங்கலேயோ தலை; கால் வாங்கலேயோ கால்" என்ற வாசகங்களைக்கேட்கும்பொழுது எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. என் செய்வது? வாங்குவோரும் வயிற்றப்படுவோரு மல்லவோ கவனித்தல் வேண்டும்.

பேஷ்! இதுவன்றோ வீரம்:—சமீபத்தில் கல்கத்தாவில், மனோரமா என்ற சிறு பெண்ணை ஒரு மணிபர்ஸ் தாத்தாவுக்கு மணஞ்செய்து கொடுப்பதாக நிச்சயித்துச், சென்ற நவம்பர்மீ ௨௨ மங்களவாரத்தில் மணம் நடைபெறுவதாக இருந்ததாம். ஆனால் மாப்பிள்ளை வீட்டார் வந்து சேர்ந்ததும், அப்பெண் தாத்தாவுக்கு வாழ்க்கைப்படமுடியாது என்று சொல்லியதாம். அதன் சுற்றத்தார்களாகிய பெண்மக்கள் அனைவரும் அவ்வாறே சொல்லிவிட்டார்களாம். அதனால் அக்கட்டிளங் குமரியைக் கட்டிக்கொள்ளக் காதல்கொண்ட தாத்தா, தடிக்கம்பை எடுத்துக்கொண்டு போய்விட்டாராம். பேஷ்! இதுவன்றோ வீரம்! இப்பெண்ணன்றோ பெண்மணி! நமது நாட்டில் கல்தூணைக் கட்டிக்கொள்ளச் சொன்னாலும், கண்ணில்லாதவருடைய ஊன்றுகோலுக்கு வாழ்க்கைப்படச் சொன்னாலும் சரியென்று கட்டிக்கொள்ளும் கண்மணிகளா பெண்மணிகள்?

பல்வலி:—தேகாப்பியாசப் பயிற்சியில் தேர்ந்த கிளாடிஸ் போர்ஷியா என்னும் ஒரு மாது, ஒரு ரப்பர்பாடின் மூலம் தன்மேல்வாய்ப் பற்களால், தன்னுடைய முழுஉடலையும் தாங்குகின்றாளாம். இதே மாதிரி நமது நாட்டில் சில நண்பர்கள் தங்களுடைய பற்களால் குண்டூர்அரிசி மூட்டையைத் தூக்கிவைப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இவர்களுடைய விஷயம் பிரபலப்படுவதில்லை. இவர்களுடைய பற்களும் தசைகளும் கற்களினும் வலிமைபடைத்தனவாகவே யிருத்தல் வேண்டும். ஆனால் இப்பொழுது பதினாறுவயதுப் பையன்களுக்கெல்லாம் பல்வலி வந்துவிடுகிறது. சிலருக்கு நல்ல இளவயதிலேயே பல் உதிர்ந்து போகின்றது. காரணம்? கண்டவற்றையெல்லாம் கடிப்பதும் பேணாமையுமே!

வைகுண்ட ஏகாதசி:—இன்று நமது நாடெங்கும் வைகுண்ட ஏகாதசி இனிது கொண்டாடப்பெறும். பாகவதோத்தமர்கள் எல்லோரும் பகவத் பஜனை செய்வார்கள். இன்று இரவு எல்லோரும் கண்விழித்திருப்பார்கள். பல பக்தகோடிகள் குட்டைப்புராணம் படிப்பார்கள். ஏறக்குறைய இருபதினாயிரம் புராணங்களாவது விலைபோகும். பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் வரவு செலவு செய்யப்பெறும். இன்றையதினம் எல்லோருக்கும் இன்பமாகவேயிருக்கும். வைகுண்ட ஏகாதசி மஹாத்மியத்தை இனிப் புதுப்பித்து அச்சிடுவோரை அத்துடன் குட்டைப்புராணபடன படலம் ஒன்றைச் சேர்ப்பிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்று
சொ. முருகப்ப செட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பெற்றது.